மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

அசல் வழக்கு எண்.221/2018

2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சவுண்டம்மாள் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

01.08.2025 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. நான் எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் அப்பாவின் இடத்திற்காக நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். என் தகப்பனார் பெயர் கிருஷ்ணசாமி. நான் கிருஷ்ணசாமியின் வாரிசு என்பதற்கான ஆவணம் ஏதேனும் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால் என் தகப்பனாரின் இறப்பு சான்றுகளை ஒப்படைத்துள்ளேன். நான் வாரிசு சான்றிதழைஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். திருமண அழைப்பிதழை கொடுத்துள்ளேன்.

2. நான் கிருஷ்ணசாமி செட்டியாரின் வாரிசு என்பதை நான் தாக்கல் செய்துள்ள திருமண அழைப்பிதழை வைத்து தீர்மானிக்க இயலாது என்று சொன்னால் சரியல்ல. கிருஷ்ணசாமி செட்டியாரின் மனைவி பெயர் மல்லம்மாள் அவருக்கு மனோகரன் என்ற மகனும், பூங்கொடி என்ற மகளும் வாரிசுகள் என்றால் சரிதான். நான் தான் கிருஷ்ணசாமி

செட்டியாருக்கு மூத்த மகள். நான் கிருஷ்ணசாமி செட்டியாருக்கு வாரிசே கிடையாது என்றும், மேற்படியாருக்கு மனைவி மல்லம்மாள் மற்றும் மகன் மனோகரன், மகள் பூங்கொடி ஆகியோர்கள் மட்டும் தான் வாரிசுகள் என்று சொன்னால் சரியல்ல.

3. இந்த வழக்கின் தாவா சொத்து கிருஷ்ணசாமி செட்டியாருக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் அவர் கிரயத்தின் அடிப்படையில் பாத்தியப்பட்டது கிருஷ்ணசாமி செட்டியார் இறந்ததற்கு பின்னிட்டு அவரின் சட்டப்படியான வாரிசுகளிடமிருந்து இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி தகுந்த பிரதி பிரயோஜனம் அடிப்படையில் கிரயம் பெற்றுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. அந்தக் கிரய ஆவணத்தில் என்னைப் பற்றி எந்த விதமான குறிப்புகளும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களை 1ம் பிரதிவாதி கிரயம் பெற்று அனுபவம் செய்து வந்து அவர் இறந்ததற்கு பின்னிட்டு தற்போது தாவா சொத்துக்களை இரண்டு மூன்று பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல.

4. 1ம் பிரதிவாதியின் வாரிசுகள் என்ற முறையிலும் சுவாதீனத்தின் அடிப்படையிலும் தாவா சொத்துக்கள் 2, 3 பிரதிவாதிகளுக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. கிருஷ்ணசாமி செட்டியார் குடும்பத்திற்கும் தாவா சொத்துக்களுக்கும் நான் எந்த விதத்திலும் சம்பந்தமில்லாத நபர் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தின் உரிமை குறித்தும் அதன் சுவாதீன பாத்தியம் குறித்தும் எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல.

5. நான் தாவா சொத்துக்களில் கூட்டு சுவாதீனத்தில் இருந்து வருவதாக நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று

சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி சுப்பிரமணியம் என்பவர் 2014 ஆம் ஆண்டு இறந்துவிட்ட நிலையில் அவரை மட்டும் பிரதிவாதியாக கண்டு நான் 2018 ஆம் ஆண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல 2014 ஆம் ஆண்டு இறந்துவிட்ட 1ம் பிரதிவாதியிடம் தாவா சொத்துக்களை பாகம் பிரித்து கொடுக்க சொல்லி கேட்டு நான் 2018 ஆம் ஆண்டு கேட்டதாக பொய்யாக வழக்குரை சங்கதிகளை சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

6. தாவா சொத்துக்களை பொருத்தும் அதன் உரிமையாளர்களை பொருத்தும் எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. நான் கிருஷ்ணசாமி செட்டியாரின் வாரிசே இல்லை என மறுத்து 2ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரையில் தாக்கல் செய்துள்ள நிலையில் நான் அதை மறுத்து எனது முதல் விசாரணை சாட்சியத்திலோ அல்லது கூடுதல் பதில் உரையோ தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு இந்த வழக்கை தாக்கல் செய்ய எந்தவிதமான வழக்கு மூலமும் உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

7. 1ம் பிரதிவாதி பெயரில் ஆவணத்தில் நான்கில் மூன்று பங்கு என சொல்லப்பட்டுள்ளது என்ற காரணத்தினாலேயே மீதமுள்ள நான்கில் ஒரு பங்கு சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று நான் கூற இயலாது என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் வருவாய்த்துறை ஆவணங்களிலும் எனது பெயர் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் முழுவதும் 2, 3 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. தாவா

சொத்துக்களில் எனக்கு எவ்விதமான உரிமையோ பங்கு பாத்தியமோ இல்லாததால் நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடியாக தக்கது என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.08.01 18:06:23 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்